**வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வன விலங்குகள் பாதுகாப்பு நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தியுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, ஜர்னல் வவுசர்கள், கொடுப்பனவு வவுசர்கள் போன்ற முக்கிய கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லுதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் உள்ளடக்கப்படகப்பட்டுள்ளன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 02 ஆம் பந்தி பிரகாரம் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதும், வெள்ளச் | தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு கடினமானதால் குறித்த செம்மையாக்களை மேற்கொள்ள முடியாமல் போனதுடன் 2023 ஆண்டின் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் அறிவுறுத்தல் பிரகாரம் அட்டுறு அடிப்படையில் |

| | | |
|---|---|---|
| சமவெளி தேசிய பூங்காவின் மனம்பிட்டிய, கந்தளாய் சூரியபுர மற்றும் தும்மோதர ஆகிய பிரதேசங்களில் மணல் அகழ்வு கருத்திட்டங்களில் ஒரு கியுப் மணலிற்காக அரச பங்காக அறவிடப்படும் ரூபா 200 ஆன வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஜுலை முதல் திசெம்பர் வரையான காலத்தினுள் விற்கப்பட்ட மணல் கியுப் 63,519 இற்காக கிடைக்க வேண்டிய ரூபா 12,703,800 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் கடந்த ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 6,797,640 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் வருமானம் ரூபா 5,906,124 இனால் மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 12,703,764 இனால் குறைத்து காட்டுவதாக அவதானிக்கப்பட்டது. | கணக்கு தயாரிக்கும் போது திரண்ட நிதியத்திற்கு செம்மையாக்கம் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கு வைக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடந்த ஆண்டுகளில் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகை இருப்பொன்று நிதியத்திடம் காணப்பட்ட போதும், அவ்விருப்பை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை மீதான கூற்றிற்கு உட்படுத்தி இருக்கவில்லை. அவ்விருப்பில் இருந்து மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகளின் கிரயத்தை செம்மையாக்கம் செய்யாது விற்பனை வருமானம் ரூபா 461,737 மாத்திரம் நிதி செயலாற்றுகை கூற்றிற்கு உட்படுத்தியுள்ளதால் நிதியத்தின் மிகை மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் இந்த புத்தகங்கள், துண்டுப் பிரசுரம் மற்றும் சுவரொட்டிகள் இதற்கு முன்னைய ஆண்டுகளில் பிரசுரித்தவைகளாகும். எஞ்சிய இருப்பை கணக்கிட்டு 2023 ஆண்டில் செம்மையாக்கி சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களை சரியாக கணக்கெடுத்து நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தற்போது பயன்படுத்தப்படும் பெறுமதி ரூபா 9,714,883 ஆன யால பழைய படகுத்துறை சுற்றுலா விடுதி மற்றும் பயன்படுத்துப்பட்டு வரும் 2019 ஆண்டில் ரூபா 9,499,790 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 04 படகுகள் மற்றும் 02 படகு என்ஜின்கன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 19,604,250 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 06 capture gun களை மூலதனமாக்க நடவடிக்கை எடுக்காது நடைமுறை வேலைகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த சொத்துக்களிற்குரிய பெறுமானத் தேய்வு கணக்கிடலும் இடம்பெற்றிருக்காததால் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்மானமும் குறைவாக காண்பிக்கப்பட்டது. | 2023 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | பயன்படுத்தப்படும் சொத்துக்களை மூலதமாக்கி பெறுமானத் தேய்வினை செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1964 இன் 44 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்திய (469 ஆம் ) அதிகாரம்) வன விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 71(2)(எ) பிரிவின் கீழ் 1968 நவம்பர் 29 ஆந் திகதிய இலங்கை அரசின் வர்த்தமானி ஊடாக இராஜாங்க அமைச்சரினால் விதிக்கப்பட்ட 1968 ஆம் வன விலங்குகள் பாதுகாப்பு நிதிய கட்டளைகளின் 11 (ஆ) கட்டளை | நிதியத்திற்கு கிடைத்த அனைத்த தொகையை போன்று நிதியத்தினால் செலுத்திய அனைத்து தொகையையும் காண்பிக்கப்படும் மும்மாத கூற்றொன்று திறைசேரி செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு முதல் கிடைத்த தொகை மற்றும் செலுத்தப்படும் தொகைகளை காண்பிக்கப்படும் மும்மாத கூற்றொன்றை திறைசேரி செயலாளரிற்கு அனுப்பப்ப நடவடிக்கை எடுக்கிறேன். | சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் நிதியத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு தொடர்பான மும்மாத கூற்றொன்றை தயாரித்து திறைசேரி செயலாளரிற்கு அனுப்பப்ப வேண்டும். |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 103(1)(உ) பந்தி | 2014 - 2017 காலத்தினுள் காணாமல் போன 05 துப்பாக்கிகளை நட்டங்கள் மீதான பதிவேட்டில் குறித்திருக்கவில்லை. | தற்போது புலனாய்வு குழுவொன்றை நியமித்து புலனாய்வு நடவடிக்டகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | புலனாயின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கவும், நட்ட சேத பதிவேட்டில் குறிப்பிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 104(1) (அ) பந்தி | 2009 நவம்பர் 24 திகதி AB 40687 கொண்ட கைத்துப்பாக்கி காணாடல் போனது தொடர்பாக பரிசோதனையொன்றை நடாத்தி இருக்காததால் நட்டத்தின் அளவை, அதற்கு காரணம் மற்றும் பொறுப்புதாரை தீர்மானித்திருக்கவில்லை. | புலனாய்வு அறிக்கை பரிந்துரையை நடைமுறைப்படுத்த அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தாமதமின்றி பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 877 (2) (அ) மற்றும் 2020 இன் ஆகஸ்ட் 08 திகதிய இலக்கம் 1/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 15.1(3)(2)(அ) பந்தி | ஒவ்வொறு நிதியத்திற்கும் வேறாக வங்கிக் கணக்கொன்றை பேணிச் செல்ல வேண்டிய போதும் நிதியத்தின் நடவடிக்கைகள் திணைக்கள வங்கிக் கணக்கின் ஊடாக பேணிச் செல்லப்பட்டிருந்தது. | வன விலங்குகள் பாதுகாப்பு நிதியம் பொது திறைசேரியுடன் நடாத்திச் செல்லும் கணக்கு கூற்றின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கொன்றாகும் அதனால் அதற்காக வேறான வங்கிக் கணக்கொன்று பேணப்படவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் நிதியத்திற்காக வேறாக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2019 ஜுன் 13 ஆம் திகதிய மற்றும் 01/2018(i) ஆம் | சகல அரசாங்க நிறுவனத்தினாலும் வழங்கப்படுகின்ற | தேசிய ஒதுக்கப் பிரதேசம் அல்லது | அரச நிதிச் சுற்றிக்கை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் 03 ஆம் பந்தி | பல்வேறு சேவைகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற கட்டணம் 15 சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டியிருந்த போதிலும், 2006 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1433/4 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரத்தின் மூலம் தேசிய ஒதுக்கப் பிரதேசம் அல்லது சரணாலயத்தில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்தலுக்கு பயன்படுத்தப்படுகின்ற மீன்பிடி படகுக்காக அறவிடப்படுகின்ற ரூபா 250 தொகையான அனுமதிப் பத்திர கட்டணம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் திருத்தப்பட்டிருக்க வில்லை. | சரணாலயத்தில் அமைந்துள்ள நீர்த்தேக்கத்தில் மீன் பிடித்தலுக்கு பயன்படுத்தப்படு கின்ற மீன்பிடி படகுக்காக அறவிடப்படுகின் ற ரூபா 250 ஆன அனுமதிப் பத்திர கட்டணத்தை போன்றே குறித்த வர்த்தமானியும் தற்போது திருத்தப்படுகின் ற நிலையில் காணப்படுகின்ற து. | கட்டணத்தை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2020/01 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் I பிரிவின் வழிகாட்டி 04 இல் 15.1 பந்தியின் கீழான நிதிப் பிரமாணம் 877(2)(இ) | | | |
| i | 03 ஆம் பிரமாணம் | ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் நிதியத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய முடியுமானவாறு நிதியத்தின் பிரதான கடமைகள் தொடர்பான காலாண்டு அறிக்கையை காலாண்டு முடிவடைந்தி 15 நாட்களிற்குள்ள அரச நிதி திணைக்களத்திற்கு, | பரிசோதித்துப் பார்த்து 2023 ஆண்டு முதல் காலாண்டு அறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த காலாண்டு அறிக்கையை உரியவாறு தயாரித்து குறித்த பிரிவுகளிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு மற்றும் கணக்காய்வாளரிற்கு சமர்பிப்ப வேண்டிய போதும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| ii | 07 ஆம் பிரமாணம் | குறித்த கணக்கு ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பாதீட்டு எல்லைகள் இணக்கஞ் செய்து நிதிக்கூற்றுக்களுடன் பாதீட்டு இணக்கப் பதிவேட்டை சமர்ப்பித்திருக்கவில்லை. | பரிசோதித்துப் பார்த்து 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களுடன் பாதீட்டு இணக்கக் கூற்றொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கைஎடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் பாதீட்டு இணக்கப் பதிவேடொன்றை தயாரிக்கப்பட வேண்டும். |
| iii | 5.1 ஆம் பிரமாணம் | நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. | பரிசோதித்துப் பார்த்து 2023 ஆண்டு முதல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்களுடன் செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டும். |
| iv | 6(ஆ) ஆம் பிரமாணம் | சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், சிங்கள் மொழியில் மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் மும் மொழிகளிலும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் மும் மொழிகளிலும் சமர்ப்பிக்க வேண்டும். |
| (உ) | 2009 நவம்பர் 08 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 05/2009 கொண்ட திணைக்கள சுற்றறிக்கை 07(7) பந்தி | வலய அலுவலகங்களினால் எதிர்வரும் மாதம் 20 ஆம் திகதியிற்கு முன்னர் பிரதான அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய அதிகார பிரதேசத்தில் தப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் தொடர்பான மாதாந்த அறிக்கையை உரியவாறு அனுப்பியிருக்கவில்லை. | தமது அதிகார பிரதேசத்தில் தப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் தொடர்பான மாதாந்த அறிக்கையை எதிர்வரும் மாதம் 20 ஆம் திகதியிற்கு முன்னர் பிரதான அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டியதாக அறிவுறுத்தி | தப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் தொடர்பான மாதாந்த அறிக்கையை உரியவாறு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வலய அலுவலகங்களிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | 2014 மார்ச் 19 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட திணைக்கள கணக்குகள் சுற்றறிக்கையில் 1.4.3 பந்தி | பிரதான அலுவல களஞ்சியத்திலிருந்து துப்பாக்கிகளை விநியோகித்தல், மீள்களஞ்சியத்திற்கு ஒப்படைத்தல், பராதீனத்தை குறிப்பதற்கான பதிவேட்டை நாளாதுவரையாக பேணிச் செல்ல நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரதான அலுவல களஞ்சியத்தில் துப்பாக்கிளை குறித்துக் கொள்ள பேணிச் செல்லும் பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொள்ள களஞ்சிய பொறுப்பு உத்தியோகத்தரிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன். | துப்பாக்கிகள் தொடர்பான பதிவேட்டை நாளாதுவரையாக பேணிக் கொண்டு துப்பாக்கிகளின் தேவையான பயன்பாடு மற்றும் நிலைத்திருத்தலை உறுதி செய்து கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 248,108,226 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 710,716,619 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 958,824,845 தொகையான வழர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வழர்ச்சிக்கு கடந்த ஆண்டிற்கு ஒப்பாக சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்மை மற்றும் பூங்கா நுழைவுக் கட்டணம் உள்ளிட்ட ஏனைய கட்டணங்களின் திருத்தம் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் காணப்படும் தேசிய ஓதுக்கப் பிரதேசங்களிற்கு நுழைவுக் கட்டணம் 2022 ஆகஸ்ட் 08 திகதி இலக்கம் 2292/11 கொண்ட வர்த்தமானி பத்திரத்தின் ஊடாக அத்திகதி முதல் திருத்தப்பட்டிருந்த போதும், அக் கட்டணத் திருத்தத்தை 2022 செப்தம்பர் மாதம் 02 திகதி முதல் தொடர்புபடுத்திக் கொண்டு அது வரை பழைய கட்டணத்தை | புதிய கட்டணங்களை உள்ளடக்கி அனுமதிப் பத்திரம் விநியோகிக்க வேண்டிய போதும், அந்த திருத்திய வர்த்தமானி கிடைத்தது 2022 செப்தம்பர் மாதம் 01 திகதி ஆகையால் புதிய கட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் 2022 செப்தம்பர் 02 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டது. | வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதி முதல் திருத்திய கட்டணத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட்டிருந்த காரணத்தால் பரீட்சிக்கப்பட்ட யாள, குமன, லாஹுகல, கெல்வெஸ்லேண்ட் ஆகிய 07 தேசிய பூங்காக்களில் மாத்திரம் அக் காலத்திற்குரியதாக ரூபா 16,844,205 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 137(5) இன் பிரகாரம் வழங்கல் தொடர்பான சந்தர்ப்பங்களின் போது அவற்றைப் பரீட்சித்து சரியானதாக கையேற்கப்பட்டமையை கொடுப்பனவை அங்கீகரிக்கும் உத்தியோகத்தர் திருப்தி அடைய வேண்டிய போதும், முனுகம்வெஹர யானை தங்குமிட மத்திய நிலையத்தை சுற்றி வேலி நிர்மாணிப்பதற்காக தேவையான 4,333 புகையிரத தண்டவாளங்களை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு 2021 ஆணடில் ரூபா 15,815,699 தொகை செலுத்தியிருந்த போதும் வழங்கப்பட்டிருந்த அளவு 660 புகையிரத தண்டவாளப் பகுதிகள் மாத்திரமாகும். | திட்டமிட்டிருந்த புகையிரத தண்டவாளங்களை விநியோகிப்பதனை இடைநிறுத்த வேண்டி ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. 3,608 புகையிரத தண்டவாளங்களை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு 2023.02.16 திகதி இலங்கை புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளரிற்கு எழுத்மூலம் கோரியுள்ள போதும் இதுவரை அந்த புகையிரத தண்டவாளங்கள் வழங்கப்படவில்லை. | எஞ்சிய புகையிரத தண்டவாள பகுதிளை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2009 இன் 22 ஆம் இலக்க வன விலங்குகள் மற்றும் தாவர பாதுகாப்பு (திருத்திய) சட்டத்தின் II ஆம் அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்ற கடுமையாக பாதுகாக்கப்பட வேண்டிய பாலூட்டி உயிரினங்கள் மற்றும் ஊர்வன வகைக்குரிய ஆமைகள், திமிலங்கள் மற்றும் டொல்பின் என 439 உயிரினங்கள் 2021 மே 20 திகதி தீப்பற்றி கடலில் அமிழ்ந்த MV X-Press Pearl கப்பல் காரணமாக மரணமடைந்திருந்தன. மரணமடைந்த உயிரினங்களைக் கண்டறிய பரிசோதனை செய்வதற்காக திணைக்களத்தால் ரூபா 2,378,249 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த பணத்தை மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது அதனை கிடைக்க வேண்டிய பணமாக நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்தது. | குறித்த கப்பல் விபத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்களையும் மீளளிப்பு செய்வதற்காக சமுத்திர சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அனைத்து தகவல்களையும் வழங்கி கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்து கொள்ள உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.3 வழிகாட்டியின் பிரகாரம் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையொன்று, சுற்றாடர் தாக்க மதிப்பீடொன்று மற்றும் சமூக ரீதியான தாக்க மதிப்பீடொன்றை செய்யாது ரூபா 241,229,637 ஆன ஒப்பந்த பெறுமதிக்கு அநுராதபுர மாவட்டத்தில வலய இலக்கம் 01 இற்காக 123 கிலோ மீற்றர் நீலமான மின்சார வேலி நிர்மாண ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததால் மின்சார வேலிகளை நிர்மாணித்துக் கொண்டு செல்லும் போது பொது மக்கள் எதிர்ப்பு, யானை போக்கவரத்து தடைப்படல், காணி பிரச்சினை ஏற்படல் போன்ற காரணங்களின் மீது 2020 சனவரி 28 திகதி வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 37 சதவீதமாக இருக்கும் போது இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது.<br><br>இந்த ஒப்பந்தத்திற்காக வழங்கியிருந்த வேலை முற்பணத்திருந்து ரூபா 28,327,073 தொகை அறவிட வேண்டியதாக இருக்கையில் அதற்காக பெற்றுக் கொண்டிருந்த ரூபா 48,245,927 ஆன பிணைமுறி 2021 திசெம்பர் 31 திகதி காலாவதியாகிச் செல்ல இடைமளிக்கப்பட்டிருந்ததுடன் செயலாற்றுகை பிணையை அரசிற்கு கையேற்பதற்கு எதிராக குறித்த ஒப்பந்ததாரரினால் 2021 நவமபர் 16 திகதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்க உரியதாக ரூபா 117,587,007 தொகை செலுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்ட போதும், 02 கொடுப்பனவு வவுசர்கள் காணமல் போயிருந்ததால் அதற்குரிய கொடுப்பனவுகளின் சரியான தன்மையை உறுதி செய்ய முடியவில்லை. | மின்சார வேலி நிர்மாணக்கும் போது ஆரம்ப சுற்றாடல் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படாததுடன், வன யானைகளின் பயணப் பாதைகள் தடைப்படும் வகையில் மின்சார வேலிகள் நிர்மாணிக்கப்படுவதில்லை.<br><br>இந்த ஒப்பந்தத்திற்குரியதாக தேசிய பிணக்குகள் தீர்பனவு மத்திய நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பனவு செயன்முறை தற்போது இடம்பெற்று வருகின்றது.<br><br>2019 ஆண்டிற்குரிய வவுசர் பத்திரங்களை தேடிக் கொள்ளள முடியாது போனதுடன், எதிர்காலத்தில் பரீட்சித்துப் பார்த்து இந்த வவுசர்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடவும், கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக பூர்த்தி செய்து கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அனைத்து கொடுப்பனவுகளையும் வவுசர் பத்திரங்களினால் உறுதி செய்யப்பட வேண்டும். |